21st March 1961]

சொல்லப்பட்டிருக்கிறது. இது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே இதுபோன்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக இதுபோன்று ஸ்டைபண்ட் கொடுத்து டாக்டர்களைப் படிக்க வைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏதோ சிறுபான்மையோர் சொல்லி இருக்கலாம். பெரும்பான்மையோர் இப்போது நல்ல முறையிலே தான் வேலை செய்கிறார்கள். அதனால் சில வருஷங்களுக்கு முன்னால் 50, 60 பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே டாக்டர்கள் இல்லாமல் இருந்தது, இப்போது குறைந்திருக்கிறது. இப்போது 118 பிரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் இருக்கிறார்கள். அங்கெல்லாம் அவர்கள் சேவா மனப்பான்மையுடன்தான் வேலை செய்கிறார்கள். எப்போது பார்த்தாலும் நாம் குறையே சொல்லிக்கொண்டிருந்தால், அவர்கள் எவ்வளவு வேலை செய்தாலும் குறையே சொல்கிறார்களே என்று, பழைய மாதிரியே செய்யலாம் என்ற எண்ணத்திற்கு இடம் ஏற்படும். ஆகவே, இப்படி குறை சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Calling bells in hospitals

*962 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களையும் நர்சுகளையும் அழைக்க *Calling bell*-களை வைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், நமது ஆஸ்பத்திரிகளிலே டாக்டர்கள், நர்சுகள் மிக மிகக் குறைவாக இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே பேஷண்டுகள் அவர்களை அடிக்கடி கூப்பிடுவது என்று சொன்னால், ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறதென்ற காரணத்தினால், அவர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நேரத்திலே உதவிக்கு அழைப்பதற்கு இந்தமாதிரி காலிங் பெல்லை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வியில் கனம் அங்கத்தினர் காலிங் பெல் கேட்பது நோயாளிகளுக்கு அல்ல, நர்சுகள் டாக்டர்களைக் கூப்பிடுவதற்கு என்று சொல்லுகிறார்கள். எப்போதும் டாக்டர்களுடனேயே நர்சுகள் இருப்பதால், அவர்களுடன் கூடப் போவதால் காலிங் பெல் எதற்கு ?

Dairy farm (Madurai)

*963 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் ஒரு பால் பண்ணை ஆரம்பிக்க உத்தேசமிருக்கிறதா ?

(இ) அதற்கு எவ்வளவு செலவாகும் ?

(உ) மதுரை சிலைமான் அருகே உள்ள சக்கிமங்கலத்தில் காலியாக உள்ள நிலத்தை இதற்குப் பயன்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.